DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 279/2023 |
| Deposition of Witness for | : | P.W. 3 |
| Name | : | **கருப்பையா** |
| Father's Name | : | சாத்தன் |
| Village | : | சிங்கம்புணரி |
| Taluk | : | சிங்கம்புணரி |
| Calling | : | கடை |
| Age | : | 48/2025 |

**(வழக்கின் எதிரிகள் 1,2 ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 26.05.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது சிங்கம்புணரியில் குடியிருந்து வருகிறேன். நான் சிங்கம்புணரியில் பெருமாள் வெடிக்கடை முன்பு பெட்டிக்கடை வைத்து நடத்தி வருகிறேன். சாட்சி மீனாட்சி என் மனைவி, எனக்கு அ.சா.1 செல்வமணிஇ அ.சா.2 கௌசல்யா மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் தேவேந்தியை தெரியாது. வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும் எனது கடைக்கு வாடிக்கையாக வருபவர்கள். வழக்கு சம்பவத்தன்று நான் ஊரில் இல்லை. மறு நாள் தான் வந்தேன். யார் யாருக்கு பிரச்சினை ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. அ,,சா.1 செல்வமணி எவ்வாறு காயம்பட்டார் என்று எனக்கு தெரியாது. போலிசார் வழக்கு சம்பவமாக என்னை விசாரித்தார்கள்.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

போலிசார் விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது 30.12.2022 ம் தேதி இரவு 10.30 மணியளவில் நானும் எனது மனைவி மீனாட்சியும் சிங்கம்புணரி சுக்காம்பட்டி ரோட்டில் உள்ள எனது பெட்டிக்கடையில் இருந்தோம் என்று அப்போது எதிரிகள் இருவரும் குடித்துவிட்டு எனது கடைக்கருகில் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும் நானும் எனது மனைவியும் எதிரிகளை சத்தம் போட்டு அனுப்பினோம் என்றும் அப்போது நல்லதம்பி என்பவர் அ.சா.1 செல்வமணி என்பவரை எதிரிகள் பாட்டிலால் எறிந்து காயப்படுத்தியதாக சொன்னார் என்றும் நான் சென்று பார்த்தபோது அ.சா.1 செல்வமணிக்கு நெற்றியில் ரத்தக்காயம் இருந்தது என்றும் போலிசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என் கடைக்கு வாடிக்கையாக வருபவர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதால் அவர்களுக்கு சாதகமான நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.05.26 23:19:40 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.